# முக்கூடற்பள்ளு காட்டும் வேளாண்மைத் தொழில் முறைகள்

*முனைவர் அ. அமுதா*
உதவிப்பேராசிரியர், வ.உ.சிதம்பரம் கல்லூரி, தூத்துக்குடி
https://doi.org/10.5281/zenodo.15526526

**முன்னுரை**

*தமிழ் இலக்கிய உலகில் காலந்தோறும் பல்வேறு இலக்கிய வகைகள் தோன்றி, வளர்ந்து செழித்திருக்கின்றன. சங்க காலத்தில் படைக்கப்பட்ட இலக்கியங்களும், அதனை அடுத்து வந்த காலங்களில் படைக்கப்பட்ட இலக்கியங்களும் கற்றோர் மட்டும் புரிந்து போற்றும் தன்மையுடன் அமைந்துள்ளன. சாதாரண மக்களுக்கென்று முழுமையான இலக்கியங்கள் சிற்றிலக்கிய காலம் வரை படைக்கப்படவில்லை. பிற்காலத்தில் தோன்றிய சிற்றிலக்கியங்களாகப் பள்ளு, குறவஞ்சி முதலியவை பாமர மக்கள் புரிந்துகொள்ளும் வகையில், அப்பாமர மக்களின் வாழ்க்கையைப் பாடுபொருளாகக் கொண்டு எளிமையான முறையில் திகழ்கின்றன. 17-ஆம் நூற்றாண்டில் தோன்றியதாகக் கருதப்படும் முக்கூடற்பள்ளு, உழவர்களின் வாழ்க்கை முறையினை நாடகத் தன்மையுடன் எடுத்துக்கூறும் இலக்கியமாகும். இப்பள்ளு இலக்கியத்தில் இடம்பெறும் உழவர்களின் வாழ்வியல் செய்திகள் குறித்து இக்கட்டுரை ஆராய்கிறது.*

**பள்ளு இலக்கியத்தின் சிறப்பு**

*பள்ளு இலக்கியங்கள், உழவர்களின் வாழ்வியல் நிகழ்ச்சிகளை எடுத்துக்கூறும் வண்ணமாகத் திகழ்கிறது. பரம்பரையாகப் பள்ளன் ஒருவன் பண்ணை ஒன்றில் பண்ணைத் தொழில் செய்து வருகிறான் அவனுக்கு இரண்டு மனைவியர்கள் உண்டு. அவர்கள் மூத்தபள்ளி இளையபள்ளி எனப்படுகின்றனர் இவர்களுக்குள் நடக்கும் வாழ்க்கை நிகழ்ச்சிகளை முக்கூடற்பள்ளு நமக்குப் படம் பிடித்துக் காட்டுகிறது.*

*இளையபள்ளி, மூத்தபள்ளி ஆகிய இருவரும் அடிக்கடி சண்டையிடுகின்றனர் உழவு காலத்தில் பள்ளனை மாடு முட்டுகிறது. அதனால் அவன் மயங்கிவிடுகிறான் அதைக் கண்ட பள்ளியர்கள் இருவரும் துன்புறுகின்றனர். அவன் மயக்கம் தெளிந்து எழுந்து வேலையைக் கவனிக்கிறான் அப்போது பள்ளியர் இருவருக்கும் சண்டை வருகிறது. இறுதியில் இருவரும் சமாதானம் அடைந்து பாட்டுடைத் தலைவனான தன் கணவனை வாழ்த்தி பள்ளனோடு ஒற்றுமையாக வாழ்க்கை நடத்துகின்றனர்.*

**முக்கூடல்-பெயர்க்காரணம்**

*முக்கூடலின் தொன்மையும் சீர்மையும் முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னே இயற்றப்பட்ட முக்கூடற்பள்ளு என்னும் நாடகத்தால் நன்கு விளங்கும். தமிழ் மொழியிலுள்ள பள்ளு நாடகங்களுள் இதுவே தலைசிறந்ததாகும். பல நூற்றாண்டுகளுக்கு முன் பாண்டி நாட்டை ஆண்ட மாறவர்மன் பயிர்த் தொழிலை வளர்ப்பதற்கு ஒரு திட்டம் வகுத்து முக்கூடலில் பெரியதோர் ஏரி வெட்டினான். அம்மன்னரது பட்டப் பெயர் ஸ்ரீவல்லபன் என்பதாகும். அப்பெயரை அமைத்து ஸ்ரீவல்லபப்பேரி என்று அந்த ஏரியை அழைத்தனர். பின் இப்பெயர் மருவி “சிவலப்பேரியாகச் மாறியது. முக்கூடல் என்னும் பழம் பெயர் மறைந்து*

*சீவலப்பேரி என்பதே ஊரின் பெயராகவும் வழங்கலாயிற்று. எனவே இந்நாளில் நெல்லை நாட்டிலுள்ள சீவலப்பேரியே பள்ளு நாடகத்தில் பாடப் பெற்ற முக்கூடலாகும்.*

**முக்கூடல்-செழிப்பு**

*உழவர் உள்ளம் களிக்கப் பொதிய மலையிலும் குற்றால மலையிலும் கார்மேகம் கவிந்தது, கனத்த மழை பெய்தது. பெரியாறு என்னும் பொருநையாற்றிலும் சிற்றாறு என்னும் சித்ரா நதியிலும் புது வெள்ளம் பொங்கி எழுந்தது. கால்களின் வழியாகக் குளத்தில் நிறைந்து வயல்களில் பாய்ந்தது காய்ந்து கிடந்த நிலத்தில் பாய்ந்து நிறைந்த தண்ணீரை முக்கூடலழகரின் கருணை வடிவாகக் கண்டு வணங்கினர் பண்பாடுடைய பள்ளர்கள்.*

*பண்ணை நிலத்தைப் பண்படுத்திப் பயிர் செய்யத் தலைப்பட்டு சேரிப் பள்ளரோடு சேர்ந்து நாற்றாங்களை நன்றாக உழுதான். வடிவழகக்குடும்பன் தொளியில் விதையைத் தெளித்தான். முளைத்த முளைக்குத் தண்ணீர் அடைத்தான். வயலைச் சுற்றி வேலியிட்டான். வளர்ந்த நாற்று முகம் கண்டான். அளவிலா மகிழ்ச்சி கொண்டான்.*

**மழைக்குறிகள்**

*வேளாண் தொழிலிற்கு காலம் தவறாத மழைப்பொழிவு மிகவும் அவசியமானதாகும். அத்தகையமழைப்பொழிவிற்கு ஏற்ப வேளாண் தொழிற்கு உண்டான முன்னேற்பாடுகளை செய்ய வேண்டும். காலம் தவறாது மழை பொழிவு இருந்தாலும் அதனை முன்னரே அறிந்து கொள்ளும் அறிவினை வேளாண் தொழில் செய்யும் பள்ளர்கள் அறிந்திருந்தனர். அறிவியல் தொழில் நுட்பம் வளர்ந்த இக்காலத்தில் வானிலை அறிக்கை, தொலைக்காட்சி, நாளிதழ்கள் மூலம் நாம் எளிதாக அறிந்து கொள்கிறோம். ஆனால் தகவல் தொழில்நுட்பக் கருவிகள் இல்லாத அக்காலத்தில் பள்ளர்கள் இயற்கையாகவே நிகழும் சில அறிகுறிகளைக் கண்காணித்து மழை வரவைக் கணித்துள்ளனர்.*

*வேனிற் காலம் முடிந்ததும் முக்கூடலில் வேளாண்மை செய்யும் உழவர் வானத்தையே நோக்கிப் பார்த்துக் கொண்டே இருப்பர். அப்போது கார்மேகம் தவழ்ந்து சென்றால் சந்தோஷத்தால் அதைக் கைகூப்பித் தொழுவர். பின் மழைக் காற்று வீசினால் மனம் களிப்பர். பருவமழையை வருவிக்குமாறு கருங்குயிலை வேண்டுவர். இவ்வாறாக மழைக்குரிய அறிகுறிகள் தோன்றும் போது உழவர்கள் மகிழ்ச்சியானது வானின் உச்சத்தைச் சென்றடைந்தது.*

***"கோடை மாறி கொண்டல் வந்தது"***

*என்று குயில் கூவும் சுழல் காற்று வீசும்: மின்னலின் ஒளி கண்ணைப் பறிக்கும், வானம்பாடி வட்டமிட்டு ஆடும். கருவானத்தில் இடியேறு முழங்கும். இவ்வறிகுறிகளைக் கண்டு அகமகிழ்ந்து ஆற்றில் வெள்ளம் நாளை வரப்போகிறது. அதற்கான அறிகுறிகள் இப்போதே தெரிகின்றன என்பதை,*

***"ஆற்று வெள்ள்ளம் நாளை வரத்***
***தோற்று தேகுறி-மலை***
***யாள மின்னல் ஈழமின்னல்***
***சுழ மின்னுதே***
***நேற்று மின்றும் கொம்பு சுற்றிக்***
***காற்ற டிக்குதே - கேணி***
***நீர்ப்படுசொ றித்தவளை***
***கூப்பிடு குதே***
***சேற்றுநண்டு சேற்றைக்குழைத்***
***தேற்ற டைக்குதே-மழை***
***தேடியொரு கோடி வானம்***
***பாடி யாடுதே***
***பேற்றுதிரு மலழகர்க்***
***கேற்றமாம் பணணைச்-சேரிப்***
***பள்ளிப் பள்ளர் ஆடிப்பாடித்***
***துள்ளிக் கொள்வோமே"***

***- முக்கூடற்பள்ளு - 30 (முக்.ப.பா.30)***

*பள்ளுப் பாடல்கள் மழை பொழிவதற்கு முன் ஏற்படும் இயற்கை அறிகுறிகளாக இப்பாடல் எடுத்துரைக்கிறது.*

**மழை வேண்டல்**

*மழையினால் ஏற்படும் நன்மைகள் மிக உண்டு. மழைநீரானது மனிதர்களுக்கும், சார்ந்து வாழும் விலங்கினங்களுக்கும் மற்றும் அனைத்து வகை தாவரங்களுக்கும் மிகவும் இன்றியமையாதது. ஆதலின் மழைநீர் வேளாண் மக்களின் உயிர்நாடி ஆகும். அதனால் மழையின் அருமை உணர்ந்து மரியாதை செய்யும் விதமாகவும், பருவத்தில் தவறாது பெய்ய வேண்டியும், எதிர்காலத்திலும் வருடாவருடம் பஞ்சமில்லாது தொடர்ந்து பெய்ய வேண்டியும் மழை பொழிவதற்கு முன்னர் இறை வழிபாட்டினை மேற்கொண்டதை,*

***"குமுக்கா வுடையாரையர் தமக்குச் சாத்தும்***
***கங்கணங் கட்டி ஏழு செங்கிடாயும்***
***(கண்.ப.பா.53)***
***கரையடிச் சாத்தாமுன்னே விரைய வெட்டும்"***
***(முக்.ப.பா.32)***

*மேற்கண்ட பள்ளுப் பாடல்களில் மழை வரவை பொய்யாது பொழிய வேண்டியும், அதனை மகிழ்ச்சியுடன் வரவேற்கும் பொருட்டும் இவ்விழாவைச் சிறப்பு செய்தனர். இத்தகைய மழை வேண்டல் வழிபாடுகள் வேளாண் குடி மக்களுக்கு மன நிறைவையும், தெய்வத்தால் மழை பொழியும் என்ற நம்பிக்கையினையும் தருகின்றது.*

**உரமிடல்**

*மண்ணை உழுவதற்கு முன்னரே உரமிடும் முறையைக் கையாண்டனர். உரமிடுவதால் இரண்டு பயன்கள் உண்டு. 1. சத்துக்கள் கிடைப்பது, 2. மண்ணின் கடினத்தன்மையை இளக்கி மென்மையாக மாற்றுவது. எனவேதான் உழுவதற்கு முன்பும் விதை விதைப்பதற்கு முன்பும் உரமிட்டனர். "உரமிடுதலில் கிடைவைத்தல் என்னும் கால்நடைக் கழிவுகளைப் பயன்படுத்துதலும் குழைபதித்தல் என்னும் பசுந்தழை உரத்தைப் பயன்படுத்துதலும் பண்டைக்காலம் முதல் பெரும்பாலும் பின்பற்றப்பட்டு வந்தன" என்பதை, ந.வீ. ஜெயராமன் கூற்றின் மூலம் அறிய முடிகிறது. (தமிழ் இலக்கியத்தில் வேளாண் அறிவியல், ப.5) இதன்மூலம் உரமிடுதல் இரண்டு வகையாக இருந்துள்ளது. 1. கிடைவைத்தல், 2. குழைபதித்தல்.*

*கிடைவைத்தல் என்பது கால்நடை கழிவுகளைக் கொண்டு உரமாக்குவது, குழைபதித்தல் என்பது, கொழுஞ்சி, அவுரி, ஆவரை, சோளத்தட்டைகள் போன்றவற்றின் மட்கிய தாவரக் கழிவுகள் மற்றும் பசுந்தாள்கள் போன்றவற்றை உரமாக்குவது ஆகும். "கிடைவைத்தல்" என்பது உரமிட வேண்டிய வயலில் இரண்டு அல்லது மூன்று இரவுகள் ஒரே இடத்தில் மாடுகளை அடைப்பர். இதனால் அம்மாடுகளின் சாணம், சிறுநீர் போன்றவை தானாகவே நிலத்திற்குக் கிடைத்துவிடும். இது ஆட்டுக்கிடை, மாட்டுக்கிடை என இரு வகையுண்டு. "கிடை வைத்தல்" என்பது இரவில் மட்டுமே நடைபெறும். பகலில் ஆடுகள், மாடுகள் பல இடங்களுக்கு மேய்ச்சலிற்குச் சென்று விடும். இவை தவிர வீட்டில் வளர்க்கும் ஆடுமாடுகள் மூலம் அன்றாடம் சேர்த்து வைத்த சாணங்களை எடுத்துச் சென்று வயல்களில் சிதறிவிட்டு உரமிட்டனர். இதனை "எரு இடுதல்" என்றும் அழைப்பர். சாணத்தையே "எரு" என அழைக்கின்றார்கள். உழுவதற்கு முன்னரே கிடைவைத்தலால் பயிர்களுக்கு அடியுரமானது கிடைக்கின்றது. கிடை அமர்த்துபவர்கள் "இடையர்கள், ஆயர்கள்" என்று அழைக்கப்பட்டனர்.*

***"ஆதிக்கோன் பண்ணைவயல்***
***நானடா உரமேற்றும்***
***கோனடா குடும்பர்"*** *(முக்.ப.பா.83)*
***"வீறான முக்கூடல் விளங்குபண்ணை உரமேற்ற***
***மாறாமல் ஆடுகொண்டு வருவேன்கா ணான்டே"***
***(முக்.ப.பா.77)***

*என்ற முக்கூடற்பள்ளு "கிடை வைத்தல்" பற்றி குறிப்பிடுகின்றது. கிடைவைத்தலால் இயற்கை உரம் கிடைக்கின்றது.*

**மாட்டு வகைகள்**

*உழவுத் தொழிலில் எருதுகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. எருதுகள் உழுவதற்கும், வண்டி இழுப்பதற்கும் ஏற்றம் இறைப்பதற்கும், அதன் சாணம் உரமாகவும் பயன்படுகின்றன. அறுவடை முடிந்தவுடன் பல்வேறு முறைகளில் உழைக்கும் எருதுகளுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக "மாட்டுப்பொங்கல்" ஒரு விழாவாகவே கொண்டாடப்படுகிறது. எருதுகள் வேளாண் மக்கள் வாழ்வில் வணங்கத்தக்க விலங்காக மதிக்கப்படுகின்றன. ஆன்மீக அடிப்படையில் எருது சிவபெருமானின் வாகனமாகவும் விளங்குகின்றது. நமது தேசிய சின்னத்திலும் எருதுகள் வலிமையின் குறியீடாக இடம் பெற்றுள்ளன. தமிழர்களின் "மஞ்சுவிரட்டு" என்னும் வீர விளையாட்டிலும் எருதுகளே இடம்பெறுகின்றன. இவ்வாறு வேளாண் குடி மக்களின் வாழ்வியலோடு இயைந்த மாட்டு வகைகள் பற்றி,*

***"குடைக் கொம்பன் செம் பறையன் குத்துக் குளம்பன் மேழை***
***குடைச்செவியன் குற்றாலன் கூடு கொம்பன்***
***வடர்புல்லை கரும்போரான் மயிலை கழற்சிக் கண்ணன்***
***மட்டைக் கொம்பன் கறுப்பன் மஞ்சள்வாலன்" -***
***(முக்.ப.பா.- 109)***

*என்ற பாடல் அடிகளின் மூலம் அறிய முடிகிறது.*

**உழவு முறைகள்**

*உழவு என்னும் சொல்லிற்கான விளக்கத்தினை க.வெள்ளைவாரனார் அவர்கள் சங்ககாலத் தமிழ்மக்கள் என்னும் நூலில், "நிலத்தை நன்றாக உழுது புழுதியாக்கி, நீர்ப்பாய்ச்சி, நெல் முதலியவற்றை விளைவிக்கும் பயிர்த்தொழிலை மேற்கொள்பவர் உழவர் என வழங்கப் பெறுவர். "உழத்தல்" என்பது இடைவிடாது முயலும் மெய்ம்முயற்சி யைக் குறிக்கும் சொல்லாகும். மழை, பனி, வெயில் என்னும் கால வேறுபாட்டால் உடம்புக்குளவாகுத் தொல்லைகளை ஒரு சிறிதும் பொருட்படுத்தாது, நெற்றி வியர்வை நிலத்தில் விழ இடைவிடாது உழைக்கும் மெய்ம்முயற்சி இப்பயிர்த் தொழிலுக்கு வேண்டப்படுவதாகலின், இத்தொழிலை "உழவு" என்ற சொல்லால் பண்டையோர் வழங்கினர்"[3] என்று க.வெள்ளைவாரனார் விவரிக்கின்றார். நிலத்தை அதிக முறை உழவேண்டும். உழுதலின் அளவிற்கு ஏற்ப அதில் பயிரிடப்படும் பயிரின் வளர்ச்சியும் விளைச்சலும் இருக்கும். மீண்டும் மீண்டும் உழுது மண்ணைப் புழுதியாக்குதல் பயிரிடுவதற்கு ஏற்றது. ஏனென்றால் மண்ணின் கடினத்தன்மை இளகி சேற்று வடிவம் பெறுகிறது. இதனால் பயிரின் வேர் இலகுவாக மண்ணில் பரவும். இதனால் செழித்து வளரும். மண் கடினமாக இருக்கும் பட்சத்தில் பயிரின் வேர் நன்கு ஊன்றிப் பரவாது இதனால் நீர்ச்சத்தும் கிடைக்காது. நிலத்தில் பிடிப்பும் இருக்காது போய்விடும். இதுவே நிலத்தைப் பலமுறை உழுவதற்குக் காரணமாகும். மேலும் நிலத்தின் சத்துக்களை உறிஞ்சும் தேவையற்ற புல் செடிகளும் அழிந்து விடும். இதனால் நமக்குத் தேவையான பயிர் மட்டும் தனித்து வளரும். இதனை,*

***"தொளிடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்***
***வேண்டாது சாலப் படும்" (குறள்-1037)***

*என்று திருவள்ளுவரும் உழவின் சிறப்பு பற்றி குறிப்பிடுகிறார்.*

*முக்கூடற்பள்ளு உழவைப்பற்றிக் கூறும் போது முதலிலே தரிசை அழிக்கிற முதலுழவு செய்து பின் மறித்து முச்சாலடித்து நான்கு உழவுகளையும் உழுது முடித்தனர். உழுத கட்டிகள் கரைய, வயலை சமமாக்கித் திருத்தும் பொருட்டு பரம்பு அடித்தனர், என்பதை,*

***"முந்தித் தரிசை அடித்து மறித்து முச்சாலடித்தித்து உழவு***
***நாலும் உழுதும் உழவும் திருந்தப் பரம்பு மூன்றும் உதவி."***
***(முக்.ப.பா. 126)***

*என்கிறது. உழுத வயலில் "பரம்பு அடித்தல்" என்பது கீழுள்ள மண் மேலாகவும், மேலுள்ள மண் கீழாகவும் புரட்டி எடுத்து அதனை சமப்படுத்தும் செயலாகும். பரம்படிக்கும் போது உழுத நிலம் சமதளமாக மாறிவிடும்.*

இதனால் பயிர்களுக்குப் பாய்ச்சப்படும் தண்ணீர் மேடு பள்ளம் இல்லாது அனைத்துப் பயிர்களுக்கும் சமமாக தேங்கி நிற்கும். எனவே பரம்படித்தலில் இரண்டு பயன்கள் உண்டு. பரம்படித்தல் முடிந்தவுடன் வயல்கள் நாற்று நடவிற்கு தயாராகி விடுகின்றது. உடனே நாற்றங்காலில் விதைத்த பயிர்கள் பள்ளியரால் பிடுங்கப்பட்டு சிறு சிறு கட்டுகளாக குவித்து வைப்பர். அதனை அனைத்து வயல்களுக்கும் தேவையான அளவு எடுத்துச் சென்று நடுவதற்கான பணிகளைச் செய்வர்.

## நெல்வித்து வகை

மேலும் மூன்று நதிகளும் சந்திக்கும் இடமாகிய முக்கூடலில் வித்து வகைகளாவன. சித்திரக் காலி, வாலான், இறை மீட்டான், மணல்வாரி, கருஞ்சம்பா, செஞ்சுரை, சீரகச்சம்பா, முத்து விளங்கி, மலைமண்டன், பொற்பாலை, நெடுமுக்கன், அரிக்கிராவி, மூங்கிற் சம்பா, கத்தூரி வாணன், கடைக்க கழுத்தன், இரங்கல், மீட்டான், கல்லுண்டை பும்பாளை, பாற்கடுக்கன் வெள்ளை, புத்தம், வருக அறிய முடிஎன்று சம்பா ஆகிய வித்து வகைகளை எல்லாம் தெளிவாக அறிய முடிகின்றது.

**“பலவெள் ளாமையிட் டேன்மனல் வாரியைப்**
**பண்டு நம்பெரு மாள்கட் டழித்தார்**
**செலவு போனதும் போய்ச்சில பும்பாளை**
**செண்டலக் காரர் தோப்புக்கே காணும்” -**

**(முக்.ப.பா. - 110)**

என்ற பாடல்கள் பள்ளன் பண்ணைக்காரனுக்குப் பதிலுரைத்தவாறு அமைந்துள்ளது. பண்ணைக்காரன் மூத்த பள்ளியின் முறையீட்டிற்கு இணங்கி இளைய பள்ளியின் வீட்டிற்குச் சென்று பள்ளனைக் கூப்பிட, பள்ளனும் தான் செய்த தவறுக்காகப் பயந்துகொண்டே வெளியே வருகிறான். அவ்வேளையில், யாரும் அறியாமல் இளைய பள்ளியின் வீட்டில் இருப்பவன் பண்ணை வேலைகளை எப்படிச் செய்திருக்க முடியும் என்ற எண்ணத்தில் “பண்ணைச் செய்தி கூறடா” என்று கோபத்துடன் பண்ணையார் கேட்கிறார். பள்ளு நூல்களில் இருவரும் முதன் முதலாகச் சந்திக்கும் இடம் இதுவே ஆகும். அப்போது பள்ளன் தான் செய்த தவறிலிருந்து தப்பிக்கும் பொருட்டு, பொய்யான காரணங்களைக் கூறுகின்றான்.

## நெல்விதை விதைத்தல்

உழுது, சேறு கலக்கி, நல்ல நேரம் பார்த்து நிலத்தில் நெல்விதையைப் பள்ளர்கள் விதைத்தனர் என்பதைக் குறிப்பிடும் பாடல்,

**“நல்ல சகுனம் தான் என்று முச்சாலும் உழுது இந்த**
**நாலு சாலும் தான் அடித்து வரப்புத் திருத்தி**
**மல்லிகைச் சம்பா விதை முந்நூறு கோட்டையை இப்போ**
**வயலிலே விதைத்தேன்.”**

**(மோ.ந.ப.பா. 128)**

என்ற இப்பாடலடிகள் எவ்வாறு இப்பாடலடிகள் உணர்த்துகின்றன. நெல்விதைக்கவேண்டும் என்பதை உழுத உழவைக் கண்டு மனம் மகிழ்ந்தான் பள்ளன். அருகில் உள்ள பள்ளர்களையெல்லாம் அழைத்து, எல்லோருடன் கூடி தெய்வத்தை வணங்கி அதன்பின், வயலில் விதைகளை விதைத்தனர், என்பதை,

**“உழுத உழவைக்கண்டு களித்தான் பள்ளர்**
**உள்ள பேரையெல்லாம் விளித்தான்**
**தொழுது தெய்வக்கடன் கழித்தான் - அந்தத்**
**தொளியில் விதைகள் எல்லாம் தெளித்தான்.”**

**(முக்.ப.பா. 122)**

என்ற அடிகள் விளக்குகின்றன.

## நாற்று நடவு முறைகள்

நாற்றங்காலில் விதைத்த நெற்பயிர்கள் விதைத்த 18 நாட்கள் முதல் 25 நாட்கள் ஆன உடன் நாற்றுகள் நடுவதற்குரிய பருவமாகக் கருதப்படும். நாற்றை வளர்ப்பதற்குப் பள்ளன் நாள்தோறும் பாடுபட்டான். வள நாற்று முகத்தைக் கண்டவுடன், மள்ளர்களுடன் மதுவுண்டு மகிழ்ந்தான். பண்ணைக்காரனிடம் சென்று கூறினான். அம்மகிழ்ச்சியால் சேரியிலு நாற்று வளர்ந்ததைப் பள்

**"நாற்று வளர்க்க நாளும் ஒருப் பட்டான்**
**வளர்ந்த நாற்றைமுகங் கண்டான் - சேரி**
**மள்ளர் கூடமது வுண்டான்**
**அளந்தி டாமகிழ்ச்சி கொண்டான் பண்ணை**
**ஆண்டையைப் போய் அந்தச் செய்தி விண்டான்."**
**(முக்.ப.பா. 123).**

அவ்வாறு பருவம் வந்த நாற்றுக்களைப் பெண்கள் 30 முதல் 50 பயிர்களைக் கொண்ட சிறுசிறு முடிச்சுகளாகக் கட்டித் தொகுத்து வைப்பார்கள். அதனை "நாற்றுமுடி" என்று வழக்கில் பெயர் கொண்டு அழைப்பர். நடுவதற்குரிய பெண்கள் வயலில் தயாராக இருப்பர். வயதில் மூத்த அனுபவமான பெண் வயலின் ஈசானிய மூலையில் கிழக்கு திசை சூரியனைப் பார்த்து வணங்கி, பின் சாணத்தில் பிள்ளையார் பிடித்து அருகம்புல் வைத்து அவரை வணங்கி குலதெய்வப் பெயர்களை உரக்கச் சொல்லி முதல் முடியை நட ஆரம்பிப்பார்கள். அப்போது பெண்கள் அனைவரும் குலவையிட்டு மங்கல ஒலி எழுப்புவார்கள். நன்கு நெற்பயிர் விளைய வேண்டும் என்று தெய்வத்தை வேண்டி, நெற்றியில் நாற்றை வைத்து வணங்கி நான்கு திசையும் நோக்கி குலவையிட்டு நாற்று கலந்து போகாமலும், நெருங்கியிராமலும் நன்கு பதிய நாற்று நட்டனர். இதனை,

**"வந்தித் தழகர் பதத்தைத் துதித்து**
**வகுந்து நாற்றை எடுத்து நெற்றியில்**
**வைத்து நாலு திசையும் நோக்கி**
**வாழ்த்திக் கும்பிட்டே**
**பந்தி பகுந்து நிரையை வகுத்துப்**
**பரவை யொலிபோல் குரவை எழுப்பிப்**
**பயிர் நெருங்காமல் கலந்து போகாமல்**
**பதியப் பதியும் பள்ளீரே" (முக்.ப.பா.126)**

என வரும் பாடல் இதனை உணர்த்துகிறது.

## களை பறித்தல்

பயிர்களுக்குத் தீங்கு செய்யும் தாவரங்களைக் களைவது களையெடுத்தல் ஆகும். இக்களைகள் பயிர்களுக்குரிய நீ ரையும் உரத்தையும் எடுத்துக் கொள்வதால் பயிர் வளர்ச்சி தடைப்பட்டு விளைச்சல் குறைந்து விடும். இக்காலங்களில் களைக்கொல்லி மருந்துகளை பயன்படுத்துகின்றனர். இவை சில சமயங்களில் பயிர்களுக்கு எதிர்விளைவை உண்டாக்கி விடுகிறது. நிலமும் பாதிப்புக்கு உள்ளாகிறது. மரபு வழிக் களையெடுப்பு முறையில் நெல் மற்றும் சிறிய பயிர்களுக்குப் பெரும்பாலும் பெண்கள் பொறுமையுடன் களையெடுக்கும் பணியைச் செய்கின்றனர்.

**"செங்குன்ற மேருவிலாதியாய் ழ வளர்**
**சங்கரனார் சிவ சோதியார்**
**சிந்தை மகிழ் பண்ணை வயலிலே - பெண்கள்**
**வந்து களை யெடுத்தொயிலதாய்."**
**(மோ.ந.ப.பா. 137)**

களை பறித்தல் என்பது. பயிர்ப் பாதுகாப்பில் ஒரு முக்கிய பணியாகும். இதனைத் தக்க பருவத்தில் களைகளைக் களைவதால் பயிர் நன்கு செழித்து அதிக விளைவைத் தரும்.

## அறுவடைக் காலம்

நெற்கதிர்கள் நன்றாக விளைந்து பின்னிப் பிணைந்து வரப்பை உரசிக் கொண்டு இருக்கின்ற காட்சி சங்கப் புலவர்களால் பல்வேறு அழகிய உவமைகளால் வருணிக்கப்படுகின்றன. நெல் வயல்களில் அறுவடை செய்யத் தொடங்குமுன் வயல்களில் கூடமைத்து வாழும் பறவைகளை ஓட்டும் வகையில் தண்ணுமை எனப்பட்ட ஒருவகை இசைக் கருவியை முழக்குவர். இதனை,

"சுழிசுற்றிய விளைகழனி அரிப்பறையாற் புள்ளோப்பும்." புறநானூறுப் பாடல் - 396 என்ற அடி விளக்குகின்றது. அறுவடை செய்வதற்கு நெல்லரித் தொழுவர் கூரிய வாளைப் பயன்படுத்தியுள்ளனர். என்பதை, செந்நெல்லை அறுவடை புள்ளியம்மனை வணங்கினர். செய்து களத்தில் போட்டு நல்ல என்பதை,

**"செந்நெல்லை அறுத்து நன்றாய்**
**சேர்த்தியே களத்தில் போட்டு**
**அன்னையாம் நல்ல புள்ளி**
**அடிதனை வணங்கிப் போற்றி." (முக்.ப.பா.140)**

என்ற பாடல் விளக்குகிறது.

அறுவடை செய்த நெற்கதிர்களை களத்தில் போட்டு நெல்மணிகளைச் சிந்த அடிப்பர். அடித்த பிறகு அதனைத் தூசிகள் இல்லாமல் தூற்றுவர். பின் அதனைப் பொலி போடுவர். பின் நெல்மணிகளை அளப்பர். நெல் அளத்தலைப் பாடும் பாடல் முகவைப் பாடல் என்பர்.

ஆடித் திருவிழாவிற்கு ஆராயிரம் கோட்டை நெல்லும், வருகின்ற பங்குனித் திருவிழாவிற்கு ஆயிரம் கோட்டை எனவும் நெல் அளக்கப்படுகின்றது அதனை,

**"பள்ளர்**
**வளர்க்கும் பலபெருஞ் சோலியில்**
**மறவா திருஞ் சொன்னேன்**
**ஆடித்திரு நாளுக்கு நெல்**
**ஆறாயிரங் கோட்டை - நெட்டைத்**
**தாடிப்பிச்சன் நேருஞ் சம்பா**
**நெல் அளந்தேன்."** **(முக்.ப.பா.142)**

என்கிறது முக்கூடற்பள்ளு.

## நிறைவுரை

"உழுதுண்டு வாழ்வார்க்கு ஒப்பில்லை என்பது போலசு உழவர் பெருமக்களையே நாயக நாயகியராகக் கொண்டு எழுந்துள்ள இந்தப் பள்ளு நூலும் தன் நலத்தால் ஒப்பற்றது எனில் மிகையாகாது. பயிர்த்தொழில் செய்துவரும் பள்ளர் என்னும் உழவர் வாழ்க்கையைக் கூறும் நூல் முக்கூடற்பள்ளு. இந்நூல் இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழும் கலந்து வர எழுதப் பெற்றதாகும். மழை பொழிந்ததனால் உழவர் மகிழ்ந்து உழவுத் தொழில் செய்து நெல்லை விளைவித்து மகிழ்ச்சியாய் வாழ்வது அவர்களின் குடும்ப நிகழ்ச்சிகள் ஆகியவற்றை சுவைமிக்க நாடகமாய் அமைத்துப் பாடப்படுவது இந்நூலின் சிறப்பாகும். இக்கட்டுரையின் மூலம் ஆசுர் வடகரை நாடு, சீவல மங்கை தென்கரை நாடு ஆகிய இரு நாட்டின் வளத்தையும் அறிய முடிகிறது.

## துணைநின்றவை


1. அருணாச்சலம், மு., (பதி.ஆ.), முக்கூடற்பள்ளு, தமிழ்நூலகம், தியாகராசர் நகர், சென்னை, 1946.
2. கந்தசாமி. ந பதி.ஆ, 1967, செங்கோட்டுப் பள்ளு, ந. கந்தசாமி வெளியீடு, இராசிபுரம்.
3. 3. குருசாமி சித்தர் பதி.ஆ, 2003, மோரூர் நல்லபுள்ளியம்மன் பள்ளு, மாமன்னர் அச்சகம், கோவை
4. நாட்டரசன்கோட்டை நகரத்தார், (பதி.ஆ.), கண்ணுடையம்மன் பள்ளு, ஸ்ரீ பாண்டியன் அச்சுகூடம், ரங்கோன், 1983.
5. வெள்ளைவாரனார். க, சங்ககாலத் தமிழ்மக்கள் (கட்டுரைகள்), நாம் தமிழர் பதிப்பகம், 6- 16, தோப்பு வெங்கடாசலம் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை. பதிப்பு 2015. ப.93.
6. மரியஜான் காலிங்கராயர், (பதி.ஆ.) செண்பகராமன் பள்ளு, எம்.எஸ். எம்.பிரஸ், நாகர்கோவில், 1942.
7. ஜெயராமன், ந.வீ., தமிழ் இலக்கியத்தில் வேளாண் அறிவியல், நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் பி லிமிடெட், 41பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், சென்னை, 1978.